**செய்தி வெளியீடு எண். 420** **நாள். 28.7.09**

# <u>செய்தி வெளியீடு – 28.7.2009</u>

<u>அவரவர் மாவட்டங்களிலேயே தொழில் செயல் நிலைப் படிப்பினர் பதிவு செய்து கொள்ள ஏற்பாடு</u>

பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல், வேளாண்மை போன்ற சிறப்பு கல்விகளில் பட்டம் பெற்றவர்களும், **முதுகலைப்** பட்டம் பெற்றவர்களும் சென்னை மற்றும் மதுரை ஆகிய இரு தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் ஆயிரக் கணக்கில் பதிவு செய்ய வருகின்றனர்.

மதுரைக் கிளை 16.10.2008 முதல் தொடங்கப்பட்டு மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்திலேயே செயல்படுகிறது. மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், நெல்லை, தூத்துக்குடி, நாகர்கோவில், புதுக்கோட்டை, கரூர், நாமக்கல், கோவை, திருப்பூர், ஈரோடு, உதகமண்டலம் ஆகிய 15 மாவட்டங்களைச் சார்ந்த மேற்கண்ட இளைஞர்கள் மதுரை கிளையில் பதிவு செய்து கொள்ளலாம். ஏனைய மாவட்டத்தினர் வழக்கம் போல சென்னை தொழில் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யவேண்டும்.

மேற்படி சிறப்பு பட்டதாரிகள் தங்கள் தகுதிகளை பதிவு செய்ய சென்னை மற்றும் மதுரைக்கு மட்டுமே செல்ல வேண்டியதில்லை. அதிக நெரிசலை தவிர்க்கவும், சென்னைக்கும், மதுரைக்கும் சென்று வருவதற்குரிய பொருட்செலவையும், பயணத்தையும் தவிர்க்கவும் மேற்கண்ட பட்டதாரிகள் அவரவர் மாவட்டத்திலேயே உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமே பதிவு செய்து கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு பதிவு செய்வோரின் பதிவுப் படிவம் உரியவாறு சென்னை மற்றும் மதுரை தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு பதிவு அடையாள அட்டை அஞ்சலில் உரிய நபருக்கு அனுப்பப்படும். இதனால், பதிவுமூப்பு ஏதும் பாதிக்கப்படாது. மேலும், எதிர்பாராத கூட்ட நெரிசல், பதிவு செய்யக் காத்திருத்தல் ஆகியவற்றை தவிர்ப்பதற்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, வெளி மாவட்டத்தினர் சென்னைக்கும், மதுரைக்கும் நேரில் பதிவு செய்யச் செல்லுவதைத் தவிர்த்து அவரவர் மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பதிவு செய்து கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * * *

**வெளியீடு** : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9